


தமிழராகப் பிறந்தவர்கள் தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் பயிலாது சாதல் கூடாது. இரண்டுமே தமிழரின் இருகண்கள். தொல்காப்பியத்தைக் கற்கும் பேறு பெறாது போயினும், திருக்குறளையாவது நாள்தோறும் பயிலுதல் வேண்டும்.

*- முனைவர் சி. இலக்குவனார்*

அச்சாக்கம் : ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர். கைபேசி : 9282142789

**குறள் நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்**

*முனைவர் சி. இலக்குவனார்*

# பேரவைக் குழுவியின் சிறு நடைச் செலவு



வெளியீடு

**இலக்குவனார் இலக்கியப் பேரவை**

அம்பத்தூர்

# நூல் அறிமுகம்

*பெருமைக்குரிய செவிச்சுவையாளர்களே!*

***அம்பத்தூர் இலக்குவனார் இலக்கியப் பேரவையின் நெஞ்சார்ந்த அன்பு வணக்கம்! வாழ்த்துகள்!***

எங்கள் பேரவை - இல்லை - நம் பேரவை இரண்டாம் ஆண்டில் நம் நெஞ்சங்களில் தவழ்ந்து வரும் இவ்வேளையில் **16.2.08** அன்று அஃதாவது இன்று வான்புகழ் வள்ளுவரை நினைவு கூறும் வகையில் இவ்வாண்டு திருவள்ளுவர் விழா அம்பத்தூர் அருள்சோதி திருமணமண்டபமாம் இங்கு நடைபெற்று வருகிறது.

அந்நினைவைப் போற்றும் வகையிலும் இப்பேரவையின் நிகழ்வுகளை அவையில் அமர்ந்திருப்போர் அறிந்து கொள்ளும் வகையிலும் ஒரு சிறு தொகுப்பு நூல் வெளியிட எண்ணினோம் அவ்வெண்ணத்தின் செயல்வடிவம்தான் இப்பொழுது உங்கள் கைகளில் தவழும் இச்சிறு நூல்.

அன்பர்களே! முதலில் " இலக்குவனார் யார்?" என்ற இப்பேரவைச் செயலரின் பாவோடு இந்நூல் இதழ் விரிகிறது.

அடுத்து பேராசிரியர் இலக்குவனாரின் வாழ்வியல் நிகழ்வுகளுள் அவர்தம் இளமைக்கால நிகழ்வுகள் பேராசிரியரின் கூற்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கடுத்து இலக்குவனார் தமது அயராத இடைவிடாத-உழைப்பால்-தமது ஆள்வினைத் திறத்தால் ஆற்றிய செயற்கரிய தமிழ்த்தொண்டு பற்றிய சான்றோர் பலரின் புகழுரைகள் நாம் அறிந்து நினைவு கொள்வதற்காக எடுத்தாளப்பட்டுள்ளன.

***இப்பேரவையை அணிசெய்து கொண்டிருக்கும் பெருந்தகையீர்!***

எங்கள் நினைவுக் கருவில் உதித்த இப்பேரவைக் குழவி, **மொழிப் போர் வீரர் மருத்துவர் தி. பழநிச்சாமி** அவர்கள் தலைமையில் **தொண்டால் பொழுதளந்த தூயவர்,**

பெரியவர் **தோழர் நல்ல கண்ணு** அவர்களால் தவழவிடப்பட்டு, அது கவிஞர்கள், கற்றறிந்த சான்றோர்களின் நாவில் தவழ்ந்து அவர்தம் நாவால் 'வா' வென அழைக்க தளர்நடை நடந்து பின் அவர்தம் கைத்தலம் பற்றி சிறுநடை நடந்து வந்த படிக்கட்டுகளை கால நிகழ்வுகளை எங்கள் ஒருங்கிணைப்பாளர் படிப்படியாகக் கட்டமைத்த பகுதி அடுத்து வருவது.

***செவிச்செல்வர்களே!***

இந்நிகழ்வுப் பட்டியலைத் தொடர்ந்து இதுவரை திங்கள் தொறும் தொய்வின்றி நடைபெற்ற கூட்டத்துக்குரிய அழைப்பிதழ்களின் பின்பக்கம் அமைந்துள்ள **'நற்றமிழ் அறிவோம்'** என்ற பகுதிகள் ஒன்றாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கிணங்க தொகுக்கப்பட்ட **'நற்றமிழ் அறிவோம்'** பகுதி ஆர்வலர்க்கு மேலும் தமிழுணர்வை ஏற்படுத்தும் என்றால் எங்களுக்குப் பெருமகிழ்வே. இதன்மூலம் நம் பிள்ளைகளுக்கும் நமது வணிக நிறுவனங்களுக்கும் நல்ல தமிழ்ப் பெயரைச் சூட்டி ' நாம் ஒருதமிழர்' என்று அடையாளம் காட்டுவோம்.

அரங்கத்தில் நடைபழகிய இப்பேரவைக் குழந்தையின் தளிர்க்கரத்தை தம் இதழ்க்கரங்களால் இட்டுச் சென்று மக்கள் மன்றத்தில் சேர்ப்பித்த 'இந்தியன் போஸ்ட்' இதழாசிரியர் **திரு.த.அசோகன்** அவர்களுக்கும் 'டவுன் நியூஸ்' இதழாசிரியர் **திரு.மு.கதிரவன்** அவர்களுக்கும் எங்கள் நன்றியை இதன் மூலம் பதிவு செய்கிறோம்.

இறுதியாக இப்பேரவையின் சிறுநடை சிங்க நடையாக செம்மாந்த நிலையில் உலவிவர அவையினரே! அறிஞர் பெருமக்காள்! உங்கள் நல் ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

***ஒன்று கூடுவோம்!*** ***தமிழால் ஒன்று படுவோம்!***

கவிஞர் **செம்பைசேவியர்**
ஒருங்கிணைப்பாளர்

புலவர் **உ.தேவதாசு**
செயலர்



# இலக்குவனார் யார்?

இலக்குவனாரா? இவர்யார் எனநீர்
வினவுதிராயின் விடையிறுப்பேன்யான்
சங்கத்தமிழை வங்கக் கடலில்
எறிவோம் என்றே எள்ளியவர்க்கு
சங்கத் தமிழ்பாடித் தமிழர்புகழ் வளர்ப்பமென்று
சிங்க முழக்கமிட்டுச் செயலில் காட்டியவர்
ஆசிரியப் பணியோடு அன்னைத் தமிழ்ப் பணியும்
அமைந்ததே தம்வாழ்வின் அரியபணியென்று
அலையலையாய் வந்தபல எதிர்ப்புகளைத் தம்
செயலால்
உலையெரிமுன் தூசிபோல் ஊதிவென்ற
உரமுடையோர்
மொழிப்போரில் மூன்று திங்கள் தன்னுடனே
இருப்பதற்கு
சிறையே தவம்செய்த சீமான்; அவர்தாம் நம்
செந்தமிழ்க் காவலர் **சி. இலக்குவனாராம்**

புலவர் ***உ. தேவதாசு***
செயலர்
இலக்குவனார் இலக்கியப்பேரவை



## சி. இலக்குவனார்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.11.1910 | 03.9.1973 |

## அதனினும் கொடிது இளமையது வறுமை

*"கொடிது கொடிது வறுமை கொடிது*

*அதனினும் கொடிது இளமையது வறுமை"*

என்றார் அவ்வைப் பெருமாட்டி.

அவ்வறுமையை பேராசிரியர் இலக்குவனார் துய்த்த நிலையை எப்படி வெளிப்படுத்துகிறார் பாருங்கள் அல்ல அல்ல படியுங்கள் !

''தந்தை காலமாகி விட்டார். அவரிடம் கடன் பெற்றவர்கள் எவரும் தர முன்வரவில்லை. அவர் பட்ட கடனைத் தீர்க்க வேண்டியது கட்டாயமானது. நிலத்தை விற்றுத்தான் கொடுக்க வேண்டும், என்னும் நிலைமை ஏற்பட்டது".

"யானும் உழுதுள்ளேன்; களை எடுத்துள்ளேன்; நாற்று நட்டுள்ளேன்; அரிவாளால் அறுவடை செய்துள்ளேன்; நெல்கட்டைத் தூக்கிச் சென்று களத்தில் போட்டுள்ளேன்; உழவுவேலை அனைத்தும் செய்துள்ளேன்".

''மூன்று வேளை உணவு, இரண்டு வேளையாகி ஒருவேளைதான் வயிறார உண்ணும் நாள்களும் இருந்தன. காலையில் கல்விக்கூடம் செல்லும் நான் ஒன்றும் உண்ணாமல் நீராகாரம் மட்டும் உண்டு சென்றுள்ளேன். பிறகு நண்பகல் வந்துதான் உண்பேன்".

"ஒருநாள் இரவு, உணவு கொள்ளும் நேரத்தில் எண்ணெய் இன்மையால் விளக்கேற்றப் பெறவில்லை. வெளிச்சத்திற்காக வைக்கோலைக் கொளுத்தி எரியச் செய்து அதன் ஒளியில்



உண்டோம். மிகப் பழங்காலத்தில் காடுகளில் மக்கள் இவ்வாறு காய்ந்த சருகுகளையும் புல் பூண்டுகளையும் கொளுத்திய ஒளியில்தான் உண்டு உரையாடி வாழ்ந்துள்ளனர். வறுமையால் எம் இல்லம் அப்பழங்கால நிலையை அடைந்தது. எங்கே படிப்பது?"

'வாய்மேட்டில்' வறுமையால் வாடிக்கல்விக் கோயிலை அடைய முடியாது வருந்திய யான், ''சரபோசி மன்னரின் வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்து கல்விச் செல்வத்தைப் பெற்றேன்'' என்று தமது இளமையின் வறுமையை எடுத்துரைப்பதை படிக்குங்கால் கல்மனமும் கரையும் என்பது ஒருதலை

செந்தமிழ்க்காவலர் ***சி.இலக்குவனார்*** நூலிலிருந்து

## அறிஞர்தம் இதய ஓடை

*முற்கூறியவாறு நெருப்பெனும் வறுமையில் துவண்ட நம் பேராசிரியர் இலக்குவனார் அவ்வறுமையை துச்சமென மதித்து வென்று கற்றுச் சிறந்து கற்றுத்துறை போகிய சான்றோர் பலர் நெஞ்சங்களில் இடம்பிடித்தவற்றுள் ஒருசிலரின் மதிப்புரைகள்.*

**முதலமைச்சர் கலைஞர் தம் நெஞ்சுக்கு நீதியில் :**

டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் 1.2.1965-இல் இந்தியை எதிர்த்துப் போராடுமாறு மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டு கூண்டுக்கிளி ஆக்கப்பட்டார் - கைது செய்யப்பட்டார் என்று கூறும் முதல்வர் கலைஞர் அவர்கள் பின்வருமாறு இலக்குவனாரைச் சிறப்பித்துரைக்கின்றார் அது.

"இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு மிகக் கோலாகலமாகச் சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே நடைபெற்ற சமயம்; பிழையானதொரு கருத்தினைப் பெற்றிடும் வகையில் பிராமி எழுத்துகளிலிருந்துதான் தமிழ் எழுத்துகள் தோன்றின என்றும் தமிழுக்கென்று தனிச்சிறப்பான எழுத்துகள் கிடையாது என்றும் தமது கல்வெட்டு ஆராய்ச்சியின் மூலம் நிறுவிட

முயன்றார் ஒருவர். அவ்வேளையில் அவர் ஒன்றரை மணிக்குமேல் ஆற்றிய ஆய்வுச் சொற்பொழிவை ஒன்றரை நிமிடத்திலேயே தமது வாதத்தினால் பொடிப் பொடியாக்கித் தமிழின் தன்மானத்தைக் காத்துப் பிறமொழி அறிஞர்களின் கைதட்டலை, பாராட்டுதலைப் பெற்றிட்ட ஒரே தமிழ்ப் பேராசிரியர் இலக்குவனாரே! " என்பதாகும்.

"மறைமலை அடிகளாரின் துணிவும் நாவலர் பாரதியாரின் உரமும் தமதெனக் கொண்டு எத்தகு இன்னலையும் துச்சமென ஏற்று, தமிழே தமது மூச்சென உயிர்த்து வாழும் செம்மல் பேராசிரியர் இலக்குவனார்" என்பது நிதியமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகனாரின்** மதிப்புரை.

" தமிழுக்கெனத் தோன்றிய அரிய பிறவிகளில் இலக்குவனாரும் ஒருவர். அவர்தம் தமிழ்ப்பற்றும் தமிழ் வீரமும் தமிழ் நெஞ்சமும் நம் வணக்கத்துக் குரியவை. யார் முன்னும் அஞ்சாது தமிழ் பற்றிய கருத்துகளை மேடைமீது பொழிந்த தமிழ்முகில். தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டவர். தமிழுக்காகத் துன்பத்தில் வளர்ந்து துன்பத்தையே தாங்கித் துன்பத்திலே கண்ணயர்ந்தவர்'' என்கிறார் மேனாள் துணைவேந்தர் முனைவர் **வ.சுப. மாணிக்கனார்.**

''இலக்குவனாரின் தனித்தன்மையைக் குறிப்பிடுங்காலை தமிழாசிரியர்களில் அவர் தப்பிப் பிறந்தவர் எனலாம். காரணம் அவர் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே சிறையும் சென்றவர் என்பதே'' என்று தமிழகப் புலவர் குழுவின் நிறுவுநர். முத்தமிழ் காவலர். **கி.ஆ.பெ.விசுவநாதம்** பேராசிரியரின் தனித்தன்மையைக் குறிப்பிடுகிறார்.

''இலக்குவனாரின் தமிழறிவும் ஆற்றலும் துணிவும் திறமையும் அஞ்சா நெஞ்சமும் அன்புள்ளமும் விடாமுயற்சியும் தொண்டு புரியும் சிறப்பும் தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் பாடுபடும் தன்மையும் பாராட்டிப் போற்றத் தக்கனவாகும்'' என்பது **நாவலர் நெடுஞ்செழியன்** கருத்தாகும்.

"தமிழைக் காக்க இலக்குவன் ஒருவனால்தான் முடியும், வாழ்வையே தமிழுக்கு ஆக்கிக் கொண்டவன்" என்று நட்புரிமையுடன் இலக்குவனார் திறம் போற்றுவார் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.**



## மொழி ஞாயிறு பாவாணரின் பாவுரைகளில் சில.

*பகலெலாம் மாண வர்க்குப் பகுத்தறி வுடன்கற் பித்து*
*மிகலுள வொழிவு நேரம் மிளிர்குறள் நெறிந டாத்தித்*
*தகுமொரு கைம்மா றின்றித் தமிழ்வளர் கழகம் நாட்டித்*
*திகழ்வுற தமிழ்த்தொண் டிற்குத் தினையுமோர் பாராட் டுண்டோ?*

*தன்னலம் ஒன்று மின்றித் தமிழ்க்கென வாழ்க்கை ஏற்ற*
*மன்னலப் புலவர் தேரின் மருவுபண் டார கர்தாம்*
*இந்நிலை ஒருவர் உண்டோ, இலக்குவ னாரை ஒப்பார்?*
*இன்னலே தமிழ்க்கு நேரில் இன்னுடல் ஈய வல்லார்*

என்று இலக்குவனாரின் பன்முகத் தன்மையினை வியந்து பாடுகின்றார்

*செந்தமிழ்க் காவலர் **சி. இலக்குவனார்** நூலிலிருந்து*

| கூட்டங்கள் | நாள் | பொருள் | சிறப்புரை |
|---|---|---|---|
| அறிமுகக் கூட்டம் | 27.08.2006 | 'வள்ளுவத்தில் வாழ்வியல் நெறி' | புலவர் த. ஆறுமுகம் |
| கூட்டம் - 2 | 01.10.2006 | 'தமிழர் மருத்துவம்' | திரு.தெ.வேலாயுதம் எம்.டி. (சித்தா) |
| கூட்டம் - 3 | 05.11.2006 | 'திருக்குறளும் காப்பீடும்' | திரு.சொ.வினைதீர்த்தான் |
| கூட்டம் - 4 | 03.12.2006 | 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்தவை | கவிஞர் சேது குமணன் |

02.01.2007 கவிஞர் ஞான குருவின் 'கதவுகளின் கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா. மலேசியக் கவிஞர் முரசு. நெடுமாறன் கலந்து கொண்டார்.

| | | | |
|---|---|---|---|
| கூட்டம் - 5 | 07.01.2007 | 'பல்லும் சொல்லும்' | மருத்துவர் தாயப்பன் (பல் மருத்துவர்) |

| | |
|---|---|
| ஐஸ்கிரீம் | பனிக்கூழ் |
| பஞ்சாங்கம் | ஐந்திறம் |
| ஏர்கண்டிசன் | செந்தணப்பு |
| சமுதாயம் | குமுகாயம் |
| சங்கம் | கழகம் |
| சக்கரம் | ஆழி |
| சக்தி | ஆற்றல் |

| | தவிர்க்கவேண்டியவை | பின்பற்றவேண்டியவை | | |
|---|---|---|---|---|
| 1. | தை | சுறவம் | - | 30 |
| 2. | மாசி | கும்பம் | - | 30 |
| 3. | பங்குனி | மீனம் | - | 30 |
| 4. | சித்திரை | மேழம் | - | 31 |
| 5. | வைகாசி | விடை | - | 31 |
| 6. | ஆனி | இரட்டை | - | 32 |
| 7. | ஆடி | கடகம் | - | 31 |
| 8. | ஆவணி | மடங்கல் | - | 31 |
| 9. | புரட்டாசி | கன்னி | - | 31 |
| 10. | அய்ப்பசி | துலை | - | 30 |
| 11. | கார்த்திகை | நளி | - | 29 |
| 12. | மார்கழி | சிலை | - | 29 |

*குறள் நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்*

## இலக்குவனார் இலக்கியப்பேரவை

நடத்தும்

## திருவள்ளுவர் விழா

நாள் : 16-02-2008, சனி(காரி)க்கிழமை மாலை 5-00 மணி

நிகழ்விடம் : **அருள்சோதி திருமண மண்டபம்**
162-ஏ, செங்குன்றம் நெடுஞ் சாலை, அம்பத்தூர், சென்னை-600 053.

நாட்டிய நிகழ்ச்சி : *"சங்கே முழங்கு"* செல்வி **மேனகா** குழுவினர்

விழா அறிமுக உரை : கவிஞர் **செம்பை சேவியர்**
(ஒருங்கிணைப்பாளர், இலக்குவனார் இலக்கியப்பேரவை)



வரவேற்புரை : புலவர் **உ. தேவதாசு** அவர்கள்
(செயலர், இலக்குவனார் இலக்கியப்பேரவை, அம்பத்தூர்)

**சோகாஇகெதா மகளிர் அறிவியல் கலைக் கல்லூரி**
**பேராசிரியர்கள் பங்குபெறும் பாட்டரங்கம்**

தலைமை : பேராசிரியர் முனைவர் கவிஞர் **பொன்.செல்வகணபதி** அவர்கள்

*வள்ளுவர் கண்ட அறம்* : பேராசிரியர் **ஸ்ரீதேவி** அவர்கள்
*வள்ளுவர் கண்ட பொருள்* : பேராசிரியர் **கண்மணி** அவர்கள்
*வள்ளுவர் கண்ட இன்பம்* : பேராசிரியர் **ஹேமாவதி** அவர்கள்

**"பேரவையின் சிறுநடைச் செலவு" நூல் வெளியீடு**

தலைமை : வழக்கறிஞர் **இரா.சேதுநாதன்** அவர்கள்
(மேனாள் சட்டமன்ற உறுப்பினர், திண்டிவனம்)

வெளியிடுபவர் : பேராசிரியர் முனைவர் **கம்பம் சாகுல்அமீது** அவர்கள்
(தமிழ் ஆய்வுத்துறை, புதுக்கல்லூரி, சென்னை)

பெற்றுக்கொள்பவர் : மொழிப்போர் வீரர் மருத்துவர் **தி.பழநிச்சாமி** அவர்கள்

சிறப்புரை : விமர்சகர் "நேருக்குநேர்" **வீரபாண்டியன்** அவர்கள்
(சன் - தொலைக்காட்சி)

தொகுப்புரை : கவிஞர் உலையூர் சாகுல் அமீது அவர்கள்
நன்றியுரை : ஆ.வெ.நடராசன் அவர்கள்

*பாராட்டப்படுவோர்*

**த.அசோகன்** அவர்கள்
"இந்தியன் போஸ்ட்" இதழாசிரியர், அம்பத்தூர்

**மு. கதிரவன்** அவர்கள்
"டவுன் நியூஸ்" இதழாசிரியர், அம்பத்தூர்

*அனைவரும் வருக !* *அரிய பயன் பெறுக !!*

**கவிஞர் செம்பை சேவியர்**
ஒருங்கிணைப்பாளர்
4/43, முதல் முதன்மைச் சாலை,
இலெனின் நகர், அம்பத்தூர்.
தொலைபேசி : 26582257
கைபேசி : 9444025315

**புலவர் உ.தேவதாசு**
செயலர்
14, இராசசி தெரு, விநாயகபுரம்,
அம்பத்தூர், சென்னை-53.
தொலைபேசி : 26582496
கைபேசி : 9444488507